894 8109 . 2317 ரு

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு எ } மெய்கண்டான்யாண்டு-எாகூ தைத்திங்கள் 1929ஞு ஜனவரிமூ—பிப்ரவரிமூ { பரல் க

திருச்சிற்றம்பலம்

கோடிகளிடைக்குயில் கூவுமிடம்மயி
லாலுமிடம்மழு வாளுடைய
கடிகொள்புனற்சடை கொண்டநுதற்கறைக்
கண்டனிடம்பிறைத் துண்டமுடிச்
செடிகொள்வினைப்பகை தீருமிடந்திரு
வாகுமிடந்திரு மார்பகலத்
தடிகளிடம்மழல் வண்ணனிடங்கலிக்
கச்சியனேகதங் காவதமே.

சுந்தரர்.

உரை :

'கடிகொள் புனற் பிறைத்துண்ட முடிச்சடை நுதல் கொண்ட கறைக்கண்ட னிடம்' என்று இதன் இரண்டாம் அடியை மாற்றியமைத்துக் கொள்க.

'வாள்உடைய சடைகொண்ட கறைக்கண்டன்' என்று அவ்வடிக்கு வினை முடிவு செய்து கொள்க.

இவ் விரண்டாம் அடியை அடுத்துத் 'திருமார்பகலத் தடிகளிடம் மழல் வண்ணனிடம்' என்னும் பின்வரும் அடிகளை இணைத்துக் கொள்க.

இப்பொழுது இத்திருப்பாட்டைக்

'கொடிகள் இடைக் குயில் கூவும் இடம்; மயில் ஆலும் இடம்: மழுவாள் உடைய, கடிகொள் புனல் பிறைத்துண்டம் முடிச்சடை நுதல் கொண்ட, கறைக்கண்டன் இடம்; திருமார்பகலத்து அடிகள் இடம்; அழல் வண்ணன் இடம்; செடிகொள் வினைப்பகை தீரும் இடம்; திரு ஆகும் இடம் கலிக் கச்சியனேகதங்காவதம்'

என்று முறைப்படுத்திக் கொள்க.

இனிச் 'செடி கொடிகளிலே அமர்ந்து குயில்கள் இசை பாடும் இடமாயும்; அக் கொடிச் செடிகளின் இடையிலே நின்று மயில்கள் நடமாடும் இடமாயும்; மழுவையும் வாளையும் கைகளிலே உடைய, பெருக்கங் கொண்ட தண்ணீரும் பிறைத்துண்டான மூன்றாம் பிறைத் திங்களும் உள்ள சடை முடியையும் நெற்றிக்கண்ணையும் கொண்ட நச்சுக் கறைக் கழுத்தனாகிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் இடமாயும்; அகன்ற திருமார்பினையுடைய அடிகளாகிய சிவபெருமான் வீற்றிருக்கும் இடமாயும்; தீ வடிவினனான சிவபெருமான் திருக்கோயில் கொண்டிருக்கும் இடமாயும்; தீமை மிகுந்த பழமலமென்னும் பகை உயிர்களை விட்டு நீங்கி யொழியும் இடமாயும்; பேரின்பம் தலைக்கூடும் இடமாயும் உள்ளது அருட்புகழ் மிக்க திருக்கச்சியனேகதங்காவதமென்னுந் திருப்பதி'.

என்று உரை கூறிக் கொள்க.

இடை ஏழனுருபு. குயிலிசைக்கு ஏற்ப மயிலாடுமென்க. கடி, இங்கு மிகுதிப் பொருளில் வந்தது. 'கடிப்புனல்' என்று கந்தபுராணத்திலும் (தாரக, ௩௬) இது மிகுதிப் பொருளிற் புனலுக்கு வந்திருத்தல் கண்டு கொள்க. சினங்கொண்டு பொங்கிப் பெருக்கெடுத்து வரும் நீர் வெள்ளத்தைச் சிவபெருமான் தமது முடிச்சடைக்கண் தாங்கினமையால், இங்குப் புனலைக் 'கடிகொள் புனல்' என்று கிளந்தார். நுதல், இங்கு நுதற்கண்; என்னை? சிவபெருமானுக்கு வெறும் நுதலைச் சிறப்பித்தற்கு ஏதும் இயைபின்மையாலும், அவர் நெற்றிக்குள்ள சிறப்பெல்லாம் அந் நெற்றிக்கண் உள்ள கண்ணின் கண்ணதே யாதலாலும் என்பது. எனவே 'நுதல்' ஆகுபெயராம். திரு, சிறப்பு; அதாவது இங்குப் பேரின்பம். கலி-புகழ்; 'கலிக்கச்சி' யென்று இவர் கூறினாற் போலவே, 'கலிமதுரை' (திருவாசகம், திருவம்மானை, அ. என்று இப்பொருள் கொண்டு மாணிக்கவாசகப் பெருமானுங் கூறுதல் காண்க. 'உள்ளது' என்றொன்று இசை யெச்சமாக வருவிக்க. 'கண்டன், அடி

கள், அழல் வண்ணன்' என்று சிவபெருமானையே பின்னும் பின்னுங் கிளந்தார்; இங்ஙனம் ஒரு பொருளையே பின்னும் பின்னும் அடுக்கிக் கூறும் அழகினைப் 'பொருட்பின்வருநிலை யணி' யென்ப இலக்கணவாசிரியன்மார்.

திருக்கச்சியனேகதங் காவதமென்னுந் திருப்பதி நெஞ்ச ஒருமையடைதற்குரிய இயற்கை வளங்களும், அன்பைப் பெருக்கிப் பழையவினையை யறுத்தற்குரிய சிவபிரான் திருக்கோயிலும் அமைந்த இடமாயிருத்தலின், ஆங்குச் சென்று உள்ள ஒருமையும் அன்புப் பெருமையும் பெறுகின்றவர்கட்கு ஆணவ மலம் முதலாயின நீங்கிப் பேரின்பந் தலைக்கூடுமென்பது இதன் கருத்து.

சிவபிரான்றன் திருக்கோயிலும் இயற்கை வளங்களும் ஒருங்கமைந்த இடம், இறைவனது அருள் நினைவை யெழுப்பி அதனொடு மக்கள் உயிரைப் படிவித்து அவ்வண்ணமாக்கு முகத்தால் வினையொழிவு செய்து பேரின்பம் விளக்குமென்பது இதன் நுண்பொருள்.

நீநாளு நன்னெஞ்சே நினைகண்டா யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளு நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

சம்பந்தர்.

கண்டாய் - முன்னிலையசை. சாய்க்காடு - ஒரு திருப்பதி; 'யார் அறிவார் சாநாளும் வாழ்நாளும்' என்றது, சாய்க்காட்டெம்பெருமான் முதலும் ஈறும் இல்லாதவன் என்றற்கு. புகழ்நாமம் - புகழ்மிக்க நாமம். 'சுமப்ப கேட்ப ஏத்த நல்வினை பெறலாமே' என்க.

நம் 'செந்தமிழ்ச் செல்வி'யின் ஏழாஞ் சிலம்பு

நேற்று மார்கழித் திங்கள் ஈறுன கடந்த ஆறும் ஆண்டிலே நமது அருமைச் 'செல்வி' ஆறும் சிலம்பு பெற்றுத் தமிழ் மக்களின் உள்ளமலர் அமர்ந்து திருநடஞ் செய்து செந்தமிழ்த் தொண்டாற்றித் தன்கடன் இறுத்த திறம் கையொப்ப நண்பர்களும் பிறரும் அறிந்ததொன்று. இத் தைத் திங்கள் பிறந்ததும் ஏழாஞ் சிலம்பினை மிக்க ஊக்கத்துடன் பெற்றுக் கொண்டது.

நமது 'செல்வி' கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக் ஆண்டு தோறும் உயர்வடைந்து வருகின்றனமையைத் தமிழ் நன்மக்கள் உற்று நோக்கி மகிழ்தல் வேண்டும். நான்காம் ஆண்டில், நம் 'செல்வி' நாற்பத்தெட்டு பக்கங்கள் கொண்டிருந்தது. ஐந்தாம் ஆண்டில், திடீரென்று மேலொரு பதினாறு பக்கங்கள் கூடப்பெற்று அறுபத்து நான்கு பக்கங்களாக மேலோங்கிற்று. அதுமட்டு மன்றிப் பழந் தமிழ் மக்களின் சீரிய பழக்க வழக்கங்களின் விளக்கங்களை விளக் கப் படங்களுடன் ஒவ்வோ ரிதழின் இறுதியிலும் மேற்கொண்டு மிளிர்ந்தது. ஆறும் ஆண்டில், கடவுள் வணக்கத் தேவாரப்பாட்டுத் திங்கள் தோறும் வெவ்வேறு தேவாரங்களாய்ப் பலவானதோடு அவற்றிற் கெல்லாம் தெளிவான உரைகளும் எழுதப் பெற்றது. அவ் வுரைகள்தாமும் உரையிலக்கியத்திற்கு ஓர் ஆக்கமாகப் பல் வேறு முறைகளிலும் எழுதி எடுத்துக் காட்டிற்று. ஆறும் ஆண் டில் மற்றுமோர் அரும்பெருஞ் சிறப்பினாலும் 'செல்வி' உயர்வடைந் தது. முன் ஆண்டில் ஏற்றுவந்த வரி விளக்கப் படங்களெல்லாம் (Line-Blocks) ஆறும் ஆண்டிற் பூச்சு விளக்கப்படங்களாக (Half-Tone-Blocks) அழகிதாய் ஏற்று வந்தது. விளக்கக் கட்டுரை களும் முன் பின் தொடர்பின்றித் தனித்தனிப் பொருள்கள் பற்றி முன்னிருந்ததுபோ லல்லாமல், தமிழ் மக்களின் பழக்க வழக்கங் களில் முதன்மையானதும் நுட்பமானதுமான அகப்பொருட் பழக் கத்தை யெடுத்து அதனைப் பன்னிரண்டு பகுதிகளாகப் பகுத்துக் கொண்டு ஒவ்வொன்றையும் ஒவ்வோ ரிதழிலும் எளிய செழுந் தமிழ் நடையிற்கொண்டு பெரும்பயன் காட்டி விளங்கிற்று. வேறு பல அருந்தமிழ்க் கட்டுரைகளும் பலப்பல தலைப்புகளின்கீழ்ப் பகுதி பகுதியாக இதழ்தோறும் அறிஞர்கள்பால் திரட்டி வந்தது. 'செல் வி'யின் ஆறும் ஆண்டுச் சிறப்புக்கள் பலவற்றில் இன்னொன்றும் இங்குக் குறிக்கற்பாலது. அது, பெரும்பாலும் 'செல்வி' பிறமொ ழிக் கலப்பில்லாத தனிச் செந்தமிழ் நடையிலேயே பயின்று திகழ்ந் தமையாகும்!

இனி இவ்வேழாம் ஆண்டில் நம் 'செந்தமிழ்ச் செல்வி' அடை யும் வளர்ச்சிகள் பின் வருமாறு :

கடந்த ஆண்டுகளிற் போலக் கடவுள் வணக்கத் தேவாரப்

கொடுங்கோல் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போர்
நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது."*

என்பது. இதன் கருத்து, 'நற்சொற் கேட்டு நிற்ப, அப்பொழுது அருகே யிருந்த இடையர் குலத்துப் பெண்ணொருத்தி, பால் குடித்தற்காகத் தம் தாயை நினைத்துச் சுழன்று சுழன்று வருந்து கின்ற பசுங் கன்றுகளைப்பார்த்து, ஆயர்கள் பின்னே நின்று செலுத் திவர உங்கள் தாய்மார் இப்பொழுதே வந்து விடுவார் என்று கூறு கின்ற நற்சொல் கேட்டனம்; அதனாற் பகைப்புலஞ் சென்றவர் தாம் மேற்கொண்ட செயலை முடித்துக்கொண்டு உடனே வந்து விடுவ' ரென்பது. இது, மழைகாலம் பிறந்த உடனே வருவே னென்று சொல்லிப் பகை யரசரோடு போர் புரிதற்காகப் பகைப் புலஞ் சென்ற தன் தலைவனை நினைந்து, மழை காலம் பிறந்தும் இன்னும் வந்திலனே என்னும் பிரிவாற்றாமையினாற் பெரிது வருந் திக் கிடக்குந் தலைவிக்கு அவளைச் சூழ்ந்து நிற்பாரான பெண்டிர் சிலர் நற்சொற் கேட்டு வந்து சொன்ன அகப்பொருட் பகுதி யாகும். தாய் நாடி நிற்குங் கன்றுகட்குத் தாயர் வருவார் என்று ஆய்மகள் கூறிய கூற்றுத் தலைவன் வருகையை எதிர் நோக்கிக் கிடக்குந் தலைவியின் நோக்கத்திற்கு முழுதொத் திருத்தலோடு 'வருவார்' என்னும் நற்சொன் முடிபையும் பெற்றிருத்தல் காண்க. இதுவே வெற்றி காணும் நற்சொல்லாம். இனி இந் நற்சொல்லி லிருந்து தமது நெஞ்சங் கொண்ட கருத்துக்கும் தலைவன் வருவா னென்று ஒரு முடிபு தேற்றிக் கொண்டார் விரிச்சி கேட்டு நின்ற பெண்டிர். இவ்வாறே ஆகோடற் கெழுந்த படைமறவரும் ஆங் குத் தமது நோக்கத்தோ டொத்து முடிபு தேற்றி வெளிப்பட்ட தொரு நற்சொற் கேட்டுத் தஞ் செயலும் இனிது முடிந்து ஆக்கமா மென்று துணிபெய்தினர். அவர் கேட்ட நற்சொல்லை மறப்பெண்

* முல்லைப், கக-உ௰.

ணொருத்தி அருகே நின்றுளை விளித்து நம்மவர் கூட்டம் வாயிலில் திரண்டிருத்தலால் அங்குள்ள குடத்துக் கள்ளை யெடுத்துக் கொண்டுவா என்று கூறுவதாகப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும்,* இது புறப்பொருட் பகுதி. படைமறவர் ஆனிரை கவர்ந்து வந்தபின்னர்த் தமது வெற்றிக் களிப்பினாற் கள்ளுண்டு மகிழ்ந்தாடுவ ரெனக் கிளந்து மேல் வரும் 'உண்டாட்டு' என்னுந் துறை விளக்கு தலின், ஆகவர் தற் கெழுந்த அம்மறவர் தமது வெற்றிக்கறிகுறி யான நற்சொல்லென்று அதனைக் கொள்வாராயின ரென்க.

இனி இவ்விரிச்சி கேட்குமாறு: திரண்டு சென்ற வீரர் தம் படையுள் நற்சொற் கேட்டற்கு உரியரான நல்லோர் சிலர் நெல்லு நாழியும் மணமலர் சிலவும் நல்ல நீருங்கைக்கொண்டு ஆங்குக்காணப் படுங் கோயிலொன்றிற்குச் சென்று பூச்சொரிதற்கென்று நிறுத் தப்பட்டிருக்குங் குண்டத்தில் முன்பு நீரைத்தெளித்து அதன் பின் சிறிது நெல்லும் சில மலருமாகக் கலந்தவாறாய் விட்டுவிட்டுச் சிறிது சிறிதாத் தூவிக் கடவுள் வணங்கி நெஞ்சொருமையுடன் செவி நிறுத்தி நற்சொல் கேட்டு வருவர். தமிழ் நாட்டு மாந்தர் பண்டு மேற்கொண்ட இவ்வுண்மை,

"அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப"†

என்னும் முல்லைப்பாட்டினும்,

"நெல்நீர் எறிந்து விரிச்சி யோர்க்கும்"‡

என்னும் புறப்பாட்டினுந் தெளியப்படும். இங்குக் குறிக்கப்பட்ட கோயில்களுந் தெய்வங்களும் அவ்வந்நிலத்துக் கோயில்களுந் தெய் வங்களுமாகும். குறிஞ்சி நிலமாயின் முருகனையும், முல்லை நிலமாயின் மாயோனையும், மருத நிலமாயின் வேந்தனையும் (இந்திரனையும்) நெய் தல் நிலமாயின் கடற்றெய்வத்தையும் (வருணனையும்), பாலை நிலமா

* புறப்-வெ. க: ச. † முல்லைப், எ-கக. ‡ புறம், உஅ௰: கூ.

யின் ஞாயிற்றினையுங் கொற்றவையையும் வணங்கி விரிச்சிகேட்பர். இவைதம்முட் சில தெய்வங்களுக்குச் சில நிலங்களிற் பண்டு கோயில்கள் காணப்படா. அங்ஙனங் காணப்படாவாயினும் அவ்வந்நிலத்தார் தத்தம் தெய்வத்தை வணங்குதற்குரிய இடமும் முறைகளும் வகுத்துக்கொண்டிருப்பராதலால், அவ்வவ் விடங்களையும் அவ்வம் முறைகளையுமே இங்குக் கொண்டுகொள்ளல் வேண்டும். நெய்தல் நிலம் வாழும் செம்படவர் தமது குடியிருப்புகளுள்ள மணல் முற்றத்திலேயே சுறு மீனின் வல்லிய கொம்பை நட்டு அதனையே தமது கடற்றெய்வம் ஏறியுறையுந் தெய்வக்குறியாக நினைந்து வணங்குவராதலின், தெய்வம் வணங்கி விரிச்சிகேட்க விரும்பும் அந்நிலத்து மக்களும் அது செய்வரென்க. ஞாயிறுங் கொற்றவையும் எல்லா நிலங்கட்கும் பொதுவாதலானும், அவ்விரண்டனுள்ளுங் கொற்றவையே போர் மறவராற் பெரிது பாராட்டப்படுவதாதலானும் அவர் தாம் தாமிருப்பது எந்நிலமேயாயினும் பெரும்பாலும் அவ்வந் நிலங்களிலெல்லாம் நிறுத்தப்பட்டிருக்குங் கொற்றவை கோயிலுக்கே சென்று விரிச்சி கேட்பர். தாஞ்சென்ற ஊர்க்கண் கோயிலில்லையானால் ஏதானுமொரு நல்லிடத்தைக் குறித்துக்கொண்டு அதனைத் துப்புரவு செய்து நீர் தெளித்து முன் கூறியவாறே நெல்லும் மலருந் தூஉய்க் கொற்றவையை நினைந்து விரிச்சி கேட்பார். இங்ஙனம் நிகழ்வது பெரும்பாலும் ஒரு மரத்தின் கீழிடமாயிருக்கும். அவ்வாறானால் அம்மரத்திலிருக்கும் பறவையின் குரல் கண்டும் அவர் தமது நிமித்தந் தேறுவர். மக்கள் நற்சொல்லேயன்றிப் புட்கள் நற்குரல் கண்டும் ஆகவர்தற்கெழும் வேன்மறவர் நன்னிமித்தங் காணுமுண்மையை

"மன்ன வன்னிரை வந்து கண்ணுற
பின்ன நாளினுற் கோடு நாமெனச்
சொன்ன வாயுளே யொருவன் புட்குரன்
முன்னங் கூறினன் முழுது ணர்வினன்*

என்று **சிந்தாமணி**யின் கோவிந்தையா ரிலம்பகங் கூறிற்று. போர் மறவர்க்கே யன்றித் தமிழ் நாட்டின் ஏனமக்கட்கும் இங்ஙனம்

---

* சிந்தா, உ: எ.

மரத்தடியிற் சென்று இறைவனை நினைந்து விரிச்சி கேட்கும் வழக்கம் பொதுவென்று கொள்க.

இங்ஙனம் இவ்விரிச்சி கேட்டலே, அரசன் ஏவல் பெறாது தாமே நிரை கொணரற் கெழுந்த மறவர் படையேயன்றி அரசனது ஏவல் பெற்றுச் செல்லும் மறவர் படையும் அரசனது ஆக்கங் கருதி மேற்கொள்வரென்று உரை தேற்றுவார் ஆசிரியர் நச்சினார்க்கினியர். * இனி இவ் விருதிறத்தார்க்கும் ஓரோவொருகால் விரிச்சி கேளாமல் மேற்செல்வதும் நிகழுமென்பதும், அதற்கு ஏது 'வீரம் உண்டு, நாமுண்டு' என்று வீரமே பொருளாக வீரக் குறிப்பின் முனைப்புப் பெற்ற துணிவு மிக்க மறவர் சிலர் விரிச்சி வேண்டாமென்று விலக்கிப்போதலா மென்பதும் அறியற்பாலன. இதனை,

"நாளும் புள்ளுங் கேளா ஆக்கமொ
டெங்கோ னேயின ஞதலின் யாமத்துச்
செங்கால் வெட்சியுந் தினையுந் தூஉய்
மறிக்குரற் குருதி மன்றுதுக ளவிப்ப
விரிச்சி யோர்த்தல் வேண்டா
வெயிற்புறந் தருதும்யாம் பகைப்புல நிரையே"†

என்று தகரேர்யாத்திரையும் விளங்கக் கூறும். ஆயினும் விரிச்சி வேண்டாமென்று விலக்குதலே விரிச்சி கேட்கும் நினைவை யெழுப்பி அதனைத் திடுமெனவுங் கேட்பிக்குமென்னுங் கருத்துப்பட ஆசிரியர் நச்சினார்க்கினியர் விரிச்சி விலக்குதலை அது கேட்டற்கே ஓர் ஏதுவாகக் கொள்வராதலின், * பெரும்பான்மையும் விரிச்சி கேட்டு மேற்செல்லலே ஆங்கு நிகழுமென்றறிந்துகொள்க.

இனிப் 'புடைகெடப் போகிய செல' வென்பது விரிச்சி கேட்டு நன்னிமித்தந்தேறிய மறவர் தமது அரிய வழியைக் கடந்து மாற்றார் புலத்துக்குச் செல்லுதலாம். இங்குப் 'புடைகெட' வென்பது வழிப் பக்கங்களிலுள்ள பகைவர்களின் சூழ்ச்சிகட்கு அகப்படாமல் அவை கெடும்படி செல்லுதலைக் குறிக்கும். மேல்வருவதும்

---

* தொல், புறத், ௩. † புறத்திரட்டு-நிரைகோடல்.

அது. இனி, அப்பகைப்புலத்தின் அருகே செல்லும்போது அவர்தம் முள் ஒற்றராதற்குரிய சிலர் முன்னுறச் சென்று ஆன் நிரைகள் இருக்குமிடமும், அவ்விடத்தின் பரப்பும், அந்நிரையினைக் காத்து நிற்குங் காவல ரிருப்பும், நிலையுந் தொலைவும் முதலாயினவெல்லாம் தெளிவாய்த் தெரிந்துகொண்டு வந்து தம்மவர்க்கு உரைக்கும் உரைக்கூறுகளெல்லாம் 'புடைகெட ஒற்றின் ஆகிய வேய்' என்னுந் துறையுறுப்பாகும். 'வேய்' என்பது பிறர் தெரியாதபடி அறிந்து கொண்டுவந்து சொல்லுங் கோட்சொல். இதனை யறிந்துரைப்பார் பகைப்புலத்தேயுள்ள நிரை காவலர்போல உடையுங் குரலும் மாற்றிப் பொருத்திக்கொண்டு, அப் புலத்தின்கண்ணும் இவரைப் போலும் ஒற்றர் பலர் முன்னரே கண்ட வெட்சி யரவத்தால் ஆராய்ந்துகொண் டிருப்பராதலான் அவரும் அறியாதபடி அத்துணை மாயமாய் அவண்சென்று மேற்கூறிய உண்மைகளையெல்லாம் மிகவுந் திறமாய் அறிந்துகொண்டு வருவர். இவர்க்கு வாய்ந்த இந்தத் திறம் மிகவும் அருமையும், பெருமையும் உடையதாகும். இவர் தமக்குள்ள தன்னல மறுப்பு, கண்ணஞ்சாமை, குறிப்பறியுங் கூர்மை, வினைசெயும் ஆற்றல், அவற்றின் நுட்ப திட்பங்கள் முதலிய உயர்ந்த இயல்புகளெல்லாம் அறிஞராற் பெரிதும் போற்றற் குரியனவாம். ஒற்றராவார் இத்துணைத் தெளிந்த நுண்ணறிவும் திறமும் வாய்ந்தாரா யிருத்தலாலன்றே ஆசிரியர் திருவள்ளுவனார் அவரை அறிவின் நிலையமான அறிவுநூலோடிணைத்து அவ்விரண்டினையும் அரசனது கண்கட்கு நிகராமெனத் தெளித்து,

> "ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
> தெற்றென்க மன்னவன் கண்"*

என்று தமது **பொய்யா மொழியை** இயற்றி யருளினர்! இனைய அருந்திறன் வாய்ந்த ஒற்றரின் வேய்ச்சொல்லுணர்ந்த படைமறவர் அப்போதே அவர்கட்குப் பரிசுகள் நல்கிச் சிறப்பித்தலும் உண்டு.

அதன் பின்பு அம்மறவர் பகைப்புலத்தின்கண் ஆனிரையிருக்கும் இடத்திற்குப் புறம்பாகச் சென்று அங்கோரிடத்திற் கூட்ட

---

*திருக்குறள், ஒற்றாடல், க.

மாய்த் தங்குவர். தங்கித் தமக்குட் செய்துகொள்ளவேண்டிய முன்னேற்பாடுகளையும் ஒழுங்குகளையுந் திறமாகவுந் திட்டமாகவுஞ் செய்துகொண்டு நிரை காவலர் ஆன் நிரையைச் சூழ்ந்து மிக்க விழிப்போடிருக்கும் இருப்பிடத்தை முற்றும் சுற்றி வளைத்து வீரமும் எழுச்சியும் பொங்கு சினமும் மிக்கு அந் நிரை காவலரை யெல்லாம் வாளும் வேலும் வீசி ஒச்சிக் கொன்று குவிப்பர். எல்லாம் சற்றே நேரத்தில் முடிந்துவிடும். உடனே, தம்மை எதிர்ப்பார் எவருமே அங்கு இலராக, அனைவோரும் அவண் சிதறிய ஆநிரைகளை ஒருசேரத் திரட்டிக்கொண்டு மிக விரைவாய்த் தந் நாட்டுக்குச் செலுத்தி வருவர். இவற்றுள், மறவர், ஒற்றுச் சொல் கேட்டு ஆன்நிரை யிருப்புக்குப் புறம்பாகச் சென்றிறுத்தலையே 'வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்திறை' யென்றும், நிரை காவலரைக் கோறல் செய்தலையே 'முற்றிய ஊர்கொலை' யென்றும், ஆகொண்டு திரும்புதலையே 'ஆகோள்' என்றுந் தொல்காப்பியர் கூறினர்.

நிரை காவலரின் இருப்பு வேந்தன் பட்டினத்துக்குப் புறத்தே யிருக்கும். அக்காவலர்தாம் அவ்விடத்திலேயே உறைவாராதலின், அவ்விருப்பு ஒரு சேரியாய் விளங்கும். இதனைப் 'புறஞ்சேரி' யென்று கூறுவர். இங்ஙனமொன்று 'புறஞ்சேரியிறுத்த காதை' யென்னுந் தலைப்பினுற் சிலப்பதிகாரக் கதையிற் றொடர்புபடுதலும் இங்கு நினைவுகூரற்பாலது.

ஆநிரைகள் காத்து நின்ற காவலரில் வாள் தப்பிச் சிதறி ஓடிப் போயினர் சிலர் வேந்தன் பட்டினஞ் சென்று அப்பட்டினத்தார்க்கும் அரசர்க்கும் அறிவிப்பராதலின், அவரும் ஒரு படை திரட்டிக்கொண்டு விரைந்து சென்று ஆகொண்டு செல்வாரை வழியிற் கண்டு எதிர் மறித்துப் போர் தொடுப்பர். தொடுத்தும் என்? ஆதிரட்டிச் சென்றார் அது கண்டு மீண்டும் அவர்மேற் போர் திருப்பிப் பொருது வெல்வர். இங்ஙனம் பின்வந்தார்மேற் போர் மாற்றிப் பொருதலே 'பூசன்மாற்று' என்னுந் துறையாகும். இவ்வாறு சிலர் போர்மாற்றிப் பொரும் போழ்தே ஏனைச் சிலர் தாங் கொண்ட ஆன் நிரைகளை வழியிடையே நிழலினும் நீரினும் படி

வித்து அவற்றிற்கு வருத்தமில்லாமற் செலுத்திக்கொண்டு தமது ஊர்க்கே காற்றினுங் கடுகி வந்து விடுவர். ஆன் நிரையை இவர் வருத்தமில்லாமல் இன்புறுத்திக் கொணருந் துறையே 'நோய் இன்று உய்த்தல்' என்பதாகும். இத்துறை 'சுரத்துய்த்தல்' என்னும் பெயரினூற் புறப்பொருள் வெண்பா மாலையிற் காணப்படும். அரிய காட்டு வழியில் அன்பாய்ச் செலுத்தி வருதலென்பது அதன் கருத்து. இடைவழியிற் பொருதுகொண்டிருந்த மறவரும் திரும்பத் திரும்பப் பின்வந்து போர்தொடுத்தாரையெல்லாம் பொருது பொருது வெற்றியுடையராவே தமதூர்க்கு வந்து விடுவர்.

இனி இம்மறவர்தாம் தமதூர்க்கண் பகைவர் ஆநிரையோடு வந்து தோன்றுதல் 'நுவலுழித்தோற்ற' மென்றும், தாங் கொணர்ந்த நிரையினைத் தம்மவர் மாட்டுத் தந்து ஊர்ப்புறத்தே நிறுத்துதல் 'தந்து நிறை' யென்றும், பின்னர் விரிச்சி கேட்டுரைத் தாரும், ஒற்றறிந்துரைத்தாரும், பொருது ஆதிரட்டினாருமாக அவ்வானிரைகளை வேந்தனேவலாற் பகுத்துக்கொள்ளுதல் 'பாதீடு' என்றும், படை மறவர் ஆதிரட்டித் தாம்பெற்ற மகிழ்ச்சியினாற் கள்ளுண்டு களித்தாடுதல் 'உண்டாட்டு' என்றும், தாந்தாம் பகுத்துக்கொண்ட ஆநிரைகளை இரவலர்க்கு வரையாது கொடுத்து மகிழ்தல் 'கொடை' யென்றுந் துறைகள் கூறப்படுகின்றன. 'நுவலுழித்தோற்ற' மென்பது 'இப்பொழுது வருவ' ரென்று மறவர் குடிப்பெண்டிர் கூறுகின்ற நேரத்தில் ஆங்குத் தோன்றுதல்.

மேற்காட்டிய இப்பதினான்கு கருத்துக்களும் வெட்சித் திணைக்காக ஆசிரியர் தொல்காப்பியனார் பகுத்துக் கொண்ட துறைப்பொருள்களாம். இனிப் புறப்பொருள் வெண்பாமாலை யாசிரியர் மேலுங் கூறிய துறைகளைந்தும் பின் வருமாறு: அவற்றுள், ஆநிரை கொள்ளுதற்காக மறவர் படை பகைப்புலஞ் சென்ற போது அஞ்சா நெஞ்சினராய் நிரைகாவல ரூர்சென்று ஒற்றறிந்து வந்த ஒற்றர் திறம் ஏனையோர் திறத்தினுஞ் சிறந்ததாதலின், அவர்க்கு மற்றையோர் நிரை பகுத்துக்கொண்ட பங்கைக் காட்டினும் அவர் பங்குக்கு இரண்டொரு பசு மிகுதியாக ஏற்றிக்

கொடுத்தல் முறையாகுமென்பது 'புலனறி சிறப்பு' என்னுந் துறையாம். 'புலனறி சிறப்'பென்பது புலனறிந்து வந்து சொன்னமைக்காகச் செய்யுஞ் சிறப்பாம். புலனறிதலாவது மறைவான செய்திகளையறிதல். இனி விரிச்சி கேட்டார்க்கும் அங்ஙனமே பால் நிறைந்த பெரிய மடிகளையுடைய நல்ல பசுக்களாக இரண்டொன்று சேர்த்துக் கொடுக்கும் வழக்கம் 'பிள்ளை வழக்கு' எனப்படும். இங்குப் 'பிள்ளை' யென்றது கரும்பிள்ளையான ஒரு கரிக்குருவியைக் குறிக்கும். அதன் நிமித்தம் பார்த்துச் சொன்னவர்க்கு அவர் செயலை யெடுத்துப் புகழ்ந்து கூறிக் கொடுத்தல் 'பிள்ளைவழக்' கெனப்பட்டது. 'கரும்பிள்ளை நிமித்தங் கூறியார்க்கு விதந்து கொடுத்த' * லென்று இதனை **இலக்கணவிளக்க வுரை** எடுத்துக் கூறுதலும் இங்கு உற்று நோக்கற்பாலது. இனி முதன் முதலிற் படையியங் கரவங்கொண்டு புறப்படும் பொழுது துடிகொட்டினார்க்குப், பின்னர்க் கள்ளுண்ணும்போது மிகுதியாய் வார்க்கு முறைமை 'துடிநிலை' யென்னுந் துறை. தமக்குத் துணையாய் வந்து தமது கருத்தை முற்றுப் பெறுவித்த கொற்றவைத் தெய்வத்தின் அருளை வியந்து பாராட்டி வணங்கும் நிலை 'கொற்றவை நிலை'யாம். இனி, மேல் நிகழ்த்தப்போகும் போர் முதலாயவற்றிற் கெல்லாம் துணை நிற்றற்பொருட்டு மறவரெல்லாரும் முருகனுக்கு வேலன் வாயிலாக வழிபாடியற்றுவிப்ப அஞ்ஞான்று அவர்தம் பெண்டிரிற் சிலர் வள்ளிக் கூத்தாடுதல் 'வெறியாட்டு' என்னுந்துறை. வள்ளிக்கூத் தென்பது மறவர் மகளிர் வள்ளி யுருவங்கொண்டு முருகக் கடவுளுக்கு ஆடுங் கூத்து. இக்கூத்தினியல்பினை,

"மண்டமரட்ட மறவர் குழாத்திடைக்
கண்ட முருகனுங் கண்களித்தான்—பண்டே
குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப்
பிறமக ளேற்றாள் பெரிது." †

என்னும் நச்சினார்க்கினிய ருரைமேற்கோட் செய்யுளானும் அறியலாம். 'இக் கூத்து ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொது' வென்று அவ்வுரையாசிரியரே **பெரும்பாணாற்றுப் படைக்குரைத்த** உரை

---

* இலக்கணவிளக், சூ௬௩௨. † தொல், புறத், ரு-ன் மேற்கோள்.

யிற் கூறுவர். * ஆயினும் அவரே தொல்காப்பியப் புறத்திணை யியற்குரைத்த உரையில் 'இது பெண்பாற்குப் பெருவரவிற்று' என்று கூறுதலின், இதனைப் பெண்பாற்கே பெரிதும் உரித்தெனக் கொள்க. இதனை 'இழிந்தோர் காணுங் கூத்'தென்றும் அவர் உரைப்பர். †

இனி இங்குக் காட்டிய புறப்பொருள் வெண்பாமாலையின் மிகையான துறைகள் ஐந்தனுள்ளும், புலனறி சிறப்பும், பிள்ளை வழக்குந் தொல்காப்பியனுர் கூறிய 'பாதீடு' என்னுந் துறையுள் அடங்குதலும், 'துடிநிலை' யென்பது 'உண்டாட்டு' என்னுந் துறை யுள் அடங்குதலும் சற்றே கூர்ந்து நோக்கவல்லா ரெவரும் அறிந்து கொள்வர். மறவர்கள் கொற்றவையை வணங்குத லென்றது ஆநிரை கோடலென்னும் வெட்சித்திணை முழுவதூஉம் நிகழ்வதாமாதலானும், நிரைகோட லென்னுஞ் செயலுக்கு அஃ தோர் உறுப்பாகமட்டும் அமைவதன்ருமாதலானும் ஆசிரியர் அதனைத் துறைக்கண் அடங்காமை கண்டு வெட்சித்திணை முழுமைக்குமே உரியதொரு கருத்தாக,

> "மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
> கொற்றவை நிலையு மத்திணைப் புறனே." ‡

என்ருெரு நூற்பாத் தனியே யியற்றிப் புறனடையாற் கொண்டார். இனி, மேல் நிகழவிருக்கும் போர் நிகழ்ச்சியின் வெற்றிப் பேற்றைப் பற்றிய 'வெறியாட்டு' என்னுந்துறையும் ஆநிரைகோடும் அளவின்மட்டும் அமைந்த வெட்சித்திணைக்கண் அடங்குவதன் ருதலின், அதனை ஆசிரியர் வெட்சித்திணைத் துறைகளுளொன்ருகக் கொள்ளாது எல்லாப் புறத்திணைகட்கும் பொதுவாயுள்ள பொது வியல்புகளைப் பற்றிக் கூறுதற் கெடுத்துக்கொண்ட 'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்'† என்னும் பொது நூற்பாவின் கண் 'வாடா வள்ளி' யென்னுங் கூற்றினுற் பெற வைத்தார். இவ்வாறு ஆசிரியர் தொல்காப்பியனுர் தமது நூன் முறைக் கேற்பப் புறப்பொருட் செய்திகளை அமைத்துச் செல்லு முறையும், அவரல்லாத ஏனைப் புறப்பொருள் வெண்பாமாலை யாசிரியர்

---

* பெரும்பாண், ௱எம. † தொல்; புறத், ரு., ‡ ௨.

முதலியோர் தமது நூன்முறைக் கேற்ப அவற்றை அமைத்துச் செல்லு முறையும், இலக்கண விலக்கியங் கற்பார் நுண்ணுணர்ந்து ஒன்றினொன்றை இணைத்தமைத்துக் கற்றலிற் கருத்தூன்றற் பாலார். இவற்றுள் மாறுவன எவையும் இல்லையாயினும், தொல்காப்பியனார் வகுத்தமைத்த பதினன்கு துறைகளே இவ்வெட்சித் திணைக்குச் சிறப்புடையவாய்த் திகழ்தலையும் மாணாக்கர் பிரித்தறிந்து மகிழ்தல் வேண்டும். ஆசிரியர் இளம்பூரணனாரும் 'பிள்ளை வழக்கு, புலனறி சிறப்பு முதலியன அத்துணைச் சிறப்பில' வென்று உரை நிறுத்தினர்.*

இனி ஆநிரை கோடலான இவ்வெட்சித்திணைச் செயல் பெரும்பான்மையும் இரவின் கண்ணே நிகழ்வதொன்றாம். புறப்பொருள் வெண்பாமாலை, விரிச்சி கேட்டலைப் பற்றிக் கூறவந்தவிடத்து,

'ஈண்டிருண் மாலை சொல்லோர்த் தன்று.' †

என்னுங் கொளுவினாலும்,

'எழுவணி சீறூ ரிருண்மாலை முன்றில்.' †

என்னும் வெண்பாவினாலும் அதற்குரிய நேரம் மாலைப்போதென்று கூறுதலாலும், பின்னர்ப் பகைப்புலஞ் சென்று ஆகொள்ளும் நேரத்தில் அங்கெதிர்த்துப் பொரும் நிரைகாவலரைப் பற்றிக் கூறும் பொழுது 'பகல் நேரத்தில் மட்டுந் தோல்வி யடையாது வெற்றி பெறவல்ல இந் நிரைகாவலர் இவ் விரவு நேரத்திற் றோல்வி யடைந்தா' ரென்னுங் கருத்துப்பட,

'—பகலே
தொலைவிலார் வீழத் தொடுகழ லார்ப்பக்
கொலைவிலார் கொண்டார் குறும்பு.' ‡

என்று வரும் வெண்பாவினால் ஆகொள்ளும் நேரம் இரவு நேரமே யென்று தெளிய வைத்தலாலும் மேலுண்மை அறியப்படும். விரிச்சி வேண்டாவென்று விலக்கியதற்குக் காட்டாக மேற்காட்டிய தகடூர் யாத்திரைப் பாட்டிலும் ஆநிரை கொள்ளும் நேரத்தை 'யாமம்' என்னுஞ் சொல்லால் நள்ளிராப் போதென்று குறித்தமை காண்க.

---

* தொல், புறத், ௩. † புறப்-வெ, க: ச.
‡ ,, க: அ.

திருமுருகாற்றுப்படை விளக்கம்

[திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்]

(நச்சினார்க்கினியர் போக்கின்படி யுரைநடை)

இது வீடு பெறுதற்கு விழைந்தா னொருவனை வீடு பெற்றா னொருவன், எல்லாம்வல்ல முருகப் பெருமானிடத்து ஆற்று (வழி)ப் படுத்ததுபோல் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் குன்ற மெறிந்த குமரவேளைப் பாடிய திருமுருகாற்றுப் படையினை விளக்கிச் செல்வதோ ருரைநடையாம்.

(க) திருப்பரங்குன்றம்

'ஒரு பற்று மற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவங் கடந்த' தனிப் பொருளாய கந்தழியைப் பெற்ற வொருவன், அதனைப் பெற விரும்பிய வேறொருவனை நோக்கி, "நல்வினையாள! முருகப்பிரான், உயிர்கள் மகிழும் வண்ணம் கீழ்த்திசையிற் றோன்றி மேருமலையை வலங்கொண்டு திரிகின்ற யாவரும் போற்றுங் கதிரவனைக் கடலினிடத்தே கண்டாற்போல மயிலின் மீதே அடியார்கட்குக் காட்சி கொடுப்பான். ஞாயிறு கிழக்கே தோன்றிய வளவில் எங்ஙனம் உலகிருள் கெடுகின்றதோ அங்ஙனமே பெருமானது அகக் காட்சியால் அறியாமை யிருள் நெஞ்சினின்று மகன்றோடும். பகலவன் செம்மையும் கடலின் பசுமையும் காட்சியிற் படுமாறு போலவே, எம்பெருமான் திருமேனிச் செம்மையும் மயிலின் பசுமையும் காண்பார் கருத்தைக் கவர்ந்து வேறொன்றிலுஞ் சென்று தங்க விடாதபடி விளங்கும். அப்பிரான் அடியார்களைத் தாங்கும் அழகிய திருவடிகளையும் மடியோர்களின் தீப்பண்புகள் கெடும் வண்ணஞ் செய்த கார்போல் வள்ளற் றன்மை கொண்ட கைகளையும், அறக் கற்பினைக் கொண்ட அம்மையாகிய தெய்வ யானையாரையும் கொண்டிருப்பன்; கடலினின் றெழுந்த கார்மா முகில்கள் பெய்த முதற் பெயலாலே செழித்த காட்டில், நெருங்கித் தழைத்த வெண்கடம்பினது குளிர்ந்த பூந்தாரானது அவன் மார்பிற் கிடந்

தசைந்துகொண்டிருக்கும். மூங்கிற் பண்ணைகள் வானளாவி யிருக்கும்படியான மிகவு முயர்ந்த மலையினது, குரங்குகளு மேறிபறிய முடியாதபடி மரங்கள் நிறைந்த சாரலிற் பூத்த, அவன் சூடுதலில் வண்டுகளும் மொய்த்தறியாச் செங்காந்தட் கண்ணியை அப்பெருந்தகை சென்னியிற் சூடியிருப்பன்.

அம்மலையோ பல சோலைகளைத் தன்னிடத்தே கொண்டுள்ளது. அச்சோலைகளோ, தீண்டி வருத்துங் கொடுஞ் செயலைக் கொண்ட தெய்வமகளிர் பலர் கூடித் தம்முடைய தோழிமார்கள் சீவிக் கட்டிய தமது கூந்தலிற் சிவந்த காலினையுடைய வெட்சிப் பூக்களின் சிறிய விதழ்களைச் செருகி, அவைகட் கிடையிடையே, குவளைப் பூவிதழ்களைக் கிள்ளி யிட்டு, சீதேவி, வலம்புரி என்னுந் தலைக்கோலங்களை வைத்து, பொட்டிட்ட மணக்கின்ற தமது நுதல்களிலே சுறா மீனினைப் போற் றிறந்த வாயொடு கூடிச் செய்த தலைக்கோலம் வந்து தொங்கும் வண்ணம் செய்து, தமது கொண்டைகளிலே பெரிய சண்பகப் பூக்களைச் செருகி, மருதின் அழகிய பூங் கொத்துக்களையும் அக்கொண்டையிலேயே சூடி, நீர்க்கீழ்ச் செவ்வரும்புகளாற் கட்டப்பட்ட மாலையை அக்கொண்டையின் நாற்புறமும் வளைத்துக் கட்டி, அழகிய விரண்டு செவிகளிலும் அசோகின் இளந்தளிர்களை பணிந்து அவைகளைத் தமது மார்பிலே தோய்ந்துகொண்டிருக்கச் செய்து, சந்தனக் குழம்பைத் தமது இளமுலைகளிலே அப்பி, அவ்வீரம் புலர்வதற்கு முன் வேங்கைப் பூவின் மெல்லிய பூந்தாதினை யதன்மேற் றூவி, விளாவின் சிறிய தளிர்களைத் தமக்குள் ஒருவர்மே லொருவர் வீசிப் போட்டுக் கொண்டு குமரவேளின் கோழிக் கொடியை வாழ்த்தி மலையெங்கு மெதிரொலி கொள்ள அவன் புகழைப்பாடி விளையாடுஞ் சிறப்பினை யுடையவாம்.

அத் தெய்வ மகளிரோ சிறு சதங்கை யணிந்த சிவந்த சிறிய அடிகளையும், திரண்ட கால்களையும், கொடிபோல் வளைந்தாடுகின்ற விடையினையும், மூங்கில் போன்ற தோள்களையும், இந்திர கோபப் பூச்சி போன்று இயல்பிலே சிவந்த வாடைகளையும், மேகலை யணிந்த வரையினையும், இயற்கை யழகினையும், 'சாம்பூநத' மென்ற

பொன்னாற் செய்யப்பட்ட வணிகளையும், நேர்த்தியான வுடலினை யுங் கொண்ட சூரரமகளிராவர்.

அச் செவ்வேளின் வாழ்க்கையிற் சிவந்த வேலொன்று விளங்கும். அவ்வேல், பெண் பேய்கள் கைகளில் கண்கள் தோண்டி யுண்ணப்பட்ட புலால் நாற்றமுடைய பெரிய தலைகளை வைத்துக் கொண்டு, நிணஞ் செறிந்த வாயினாலே மற்ற அரக்கர்கள் அஞ்சும் படி போர்க்களத்தைப் புகழ்ந்து பாடித் தோள்களை யசைத்துத் துணங்கைக் கூத்தாட, குதிரை முகமும் மக்களுடலுமாகிய விரண்டு வடிவினை யுடைய சூரபன்மாவைக் கொன்று பின்னும், கீழ் நோக்கிய பூங்கொத்துகளையுடைய மாமரமாகி நின்ற அவனை யழித்த வெற்றியினையும் அளவிடப்படாத விசையினையுங் கொண்ட தாம்.

அப் பெண் பேய்கள், உலர்ந்த மயிரினையும், பிறழ்ந்த பற்களை யும், பிளந்த வாயினையும், சுழல்கின்ற விழியினையும், பச்சை நிறமான பிதுங்கிய கொடிய பார்வையினைக் கொண்ட கண்களையு முடை யனவாய், பேராந்தையோடு கொடிய பாம்புகள் தங்கி மார்புகளிலே வந்து மோதும்படியான நீண்ட காதுகளையும், கரடு முரடான வயிற்றினையும், கண்டார் அச்சப்படும்படியான நடையினையும், குருதி தோய்ந்த விரல்களையுடைய கைகளையும் கொண்டவைகளாம்.

அச் செங்கதிரை யொத்த சேயினது திருவடியாகிய வீட்டை யடைய நீ விரும்புவையாயின், வேண்டும் பல நற்கருத்துக்களும், உன்னெஞ்சில் நெடுங்காலமாய் நிலை கொண்டிருக்கும் இனிய வீடு பேறும் இப்பொழுதே தவறுமற் பெற்றவனாவாய். அவ்வீடு பேற்றை அம்முருகனைக் கண்டடைதற்கு அவன் எவ்விடத்தி லிருப்பனென்று வினவுவையாயின், யான் சொல்வதைக் கேட்பா யாக.

பழைமையான கூடன் மாநகரின் குடதிசையில், அழகிய வண்டுகளின் கூட்டம் வயல்களிலே மலர்ந்திருக்கும் தாமரைப் பூக்களில் இரவி லுறங்கி, வைகறைப் போதில் தேனிறைந்த நெய்தற் பூக்களில் உண்டு, ஞாயிறு தோன்றுங்காலை சுனைகளில் மலர்ந்த நீல மலர்களிற் சென்று பாடியாடும்படியான திருப்பரங்

குன்றிலே விருப்பமோ டெழுந்தருளி யிருப்பன், அம்முருகப் பிரான்.

அக் கூடன் மாநகர் எப்படிப்பட்ட தெனிலோ, விருது மொழிகள் கூறிக் கட்டின வெற்றிக் கொடிகட்குப் பக்கத்திலே பந்தும் பாவைகளும் அறுக்கக் கூடிய எதிரிகளின்மையால், ஆடிய படியே யிருக்க, பகைவர்களை யெல்லா மொழித்த பாண்டியனின் வீர மிகுதியால் போரினைக் கண்டு நெடுங்காலமாகிய கோட்டை வாசல்களையும், திருமகள் எப்பொழுதும் விட்டு நீங்காத அங்காடித் தெருக்களையும், மாடகூட மலிந்த மற்றைய மறுகுகளையும் கொண்ட மதுரைமா நகராம்.

தேரையர் மகாகரிசல்

[திரு. மா. வடிவேலு முதலியாரவர்கள்]

(சு - ஞ் சிலம்பு கூ௮௪ - ம் பக்கத் தொடர்ச்சி)

வினைதீர்த்தார் வணக்கம்

நேரிசை வெண்பா

தான்மனைசேய் மன்னமைச் சன்மீளி நோய்மருந்து
மேன்மிளகு சுக்குகணை மேவியதைப்—போன்முறையைப்
பார்த்தாள்வா ராதலினிப் பாரின்முன் னோர்க்குவினை
தீர்த்தா ரெனுநாமஞ் சீர்.

(சொற் கூட்டு) மன் அமைச்சன் மீளி நோய், மேல் சுக்கு, மிளகு கணை மருந்து மேவியதைப்போல் தான், மனை, சேய் முறையைப் பார்த்து ஆள்வார், ஆதலின் இ பாரில் முன்னோர்க்கு வினை தீர்த்தார் என்னும் நாமம் சீர் என்பது.

(சொ-ள்.) மன் (நோய்) - அரசனான வளி (வாத) நோய்க்கும், அமைச்சன் (நோய்) - மந்திரியான தீ (பித்த) நோய்க்கும், மீளி நோய் - படைத்தலைவனான ஐய (சிலேஷ்ம) நோய்க்கும், மேல் - முறையே, சுக்கு மிளகு கணை - சுக்கு மிளகு திப்பிலி என்னும் மூன்றுபொருள்களும், 'மருந்து மேவியதைப்போல் - மருந்துகளா

ஏற்பட்டுக் (அவற்றைப்போக்கி உடலைக்) காப்பதுபோல, தான் மனைசேய் - வயித்தீச்சுரரும், மனைவியாகிய தையனாயகியம்மையும், பிள்ளையான முத்துக்குமாரசாமியும், முறையை - என்றற் செய்யப்பட்ட தென்னாட்டு முறைகளான கரிசல் என்னும் நூலை, பார்த்து - திருவருட் பார்வை செலுத்தி, ஆள்வார் - அதற்குண்டாகும் இடையூறுகளைத் தீர்த்துக் காத்தருள்வார்கள், ஆதலின் - ஆகையால், இ பாரில் - இத்தென்னாட்டில், முன்னோர்க்கு - அத்தான், மனை, சேய் என்று முன்சொல்லப்பட்ட வயித்தீச்சுரர், தையனாயகியம்மை, முத்துக்குமாரசாமி என்னும் இம்மூவர்க்கும், வினைதீர்த்தார் என்னும் நாமம் - வினைதீர்த்தார் என்னுந் திருப்பேர், சீர் - சிறப்பாகவுள்ளதாம் (எ - று.)

அன்றி, முன்னோர்க்கு வினைதீர்த்தார் என்னும் நாமம் சிறப்பாயுள்ளதால் முறையைப் பார்த்தாள்வார் என உரைப்பினு மமையும். அது நூற்காப்புக்குச் சிறப்பாகாது.

(பொ - ரை.) வளி, தீ ஐகளாலுண்டாகும் நோய்களைச் சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று பொருள்களும், முறையே நீக்கி உடலைக் காப்பதுபோல் வயித்தீச்சுரரும், அவருடைய மனைவி தையனாயகியம்மையும், அவர்களுடைய பிள்ளை முத்துக்குமாரசாமியும், இந்நூற்குண்டாகும் இடையூறுகளை நீக்கிக் காத்தருள்வாராகையால் இவர்களுக்கு வினைதீர்த்தார் என்கிற திருப்பேர் சிறப்பாக உள்ளதாம் என்பது.

மன் என்னும் வளி, மீளி என்னும் ஐயம், என்னும் இவ்விரண்டு நோய்களின் குறிகளை முதற்பாட்டடியிலும், இரண்டாம் பாட்டடியிலுங் காண்க.

அமைச்சன் என்னும் தீ நோயின் குறிகளை ஈண்டுக் காண்க. அது;

"ஆகு மந்திரி பாடலம் உடலம்
ஆங் கசப்புவாய் அரக்கைநேர் கண்ணும்
ஆனனம் மேதினி மாதிரந் தலை
ஆட நடுங்குஞ் சலிலத்தே வாய்

ஆறு மிகுந்துஞ் சுரப்பா கும்மே
ஆயாசம் மிளைப் பரோசக மிகும்''

என்று இந்நூலிலும்,

"பாடலமெய் மாநாகம் பாறுநிக ராகவுடல்
பாடலமெய் மாநாகம் பாறுமே—பாடலங்கம்
பித்தசுர மாகவரு பேராக் கினிமயமாம்
பித்தசுர மாகவரு பேய்''

என்று யமக வெண்பாவிலும் தேரர் சொல்லுவதாலும்;

தீச் (பித்த) சுரத்தின் குணத்தை;

"பித்தசுரத் தின்குணத்தை யுரைக்கும் போதில்
பெரிதான மருத்துநூல் சொன்ன வாறே
நித்திரையிஞ் சும்வயிறு பேதி யாகும்
நினைந்துநினைந் தெழுந்திருந்தே யோடி மீளும்
கைத்திருக்கும் வாயுலர்ந்து பிதற்றல் செய்யும்
கடுந்தாகம் வாந்தியுடன் மூர்ச்சை விக்கல்
மெத்தவுமே சந்தாபப் படுத விந்த
விதமனைத்து மறைநூலில் மேவுந் தானே''

எனவும்;

"முந்து சரீர மழன்றுதான் முகரோ வாகி முகமினுங்கி
அந்த முகமும் விழியிரண்டும் அனலே மிகுந்து நாக்குலர்ந்து
தந்த முடனே மலசலங்கள் தாமு மஞ்சள் ப்ரலாபிக்கும்
பந்தணி விரலா யிவைதாமும் பயித்திய சுரத்தின் செயலாமே''

எனவும்;

"பகுந்திடும் பித்தம் பலபல சிந்தையாம்
வகுந்திடும் வாந்தியும் வாய்நீர் மிகவூறும்
மகிழ்ந்திடு மேனியின் மாட்டி யெரிப்பேறும்
மிகுந்து தவனிக்கு மிகவிடங் கைக்குமே''

எனவும் கூறியுள்ளவற்று னுணர்க.

இனிச் சுக்கு வளிப்பிணியை நீக்கும் என்பதை;

"வாதப் பிணிவயி றூதற் செவிவாய்
வலிதலை வலிகுலை வலியிரு விழிநீர்
சீதத் தொடுவரு பேதிப் பலரோ
சிகமலி முகமக முகவிடி கபமார்

சீதச் சுரம்விரி பேதச் சுரநோய்
தெறிபடு மெனமொழி குவர்புவி தனிலே
ஈதுக் குதவுமி தீதுக் குதவா
தெனும்விதி யிலைநவ சுறுகுண முனவே”

என்பதாலும்,

“சூலைமந்த நெஞ்செரிப்பு தோடமேப் பம்மழலை
மூல மிரைப்பிருமல் மூக்குநீர்—வாலகப
தோட மதிசாரந் தொடர்வாத குன்மநீர்த்
தோடமா மம்போக்குஞ் சுக்கு”

என்பதாலும்;

மிளகு பித்தப் பிணியை நீக்கும் என்பதை,

“சீதசுரம் பாண்டு சிலேஷ்மங்கி ராணிகுன்மம்
வாத மருசிபித்த மாமூலம்—ஓதுசந்நி
யாச மபஸ்மாரம் அடல்மேகங் காசமிவை
நாசங் கறிமிளகி னால்”

எனவும்;

“கோணுகின்ற பங்கவலி குய்யவுரோ கம்வாத
சோணிதங்க ழுத்திற்குள் தோன்றுநோய்—காணரிய
காதுநோய் மாதர்குன்மங் காமாலை மந்தமென்றீர்
ஏதுநோய் காயிருக்கி லிங்கு”

எனவும் வருவனவற்றாலும்,

திப்பிலி ஐயப்பிணியை நீக்கும் என்பதை,

“இருமல் குன்ம மிரைப்பு கயப்பிணி
ஈளை பாண்டுசந் யாசம ரோசகம்
பொரும ஊதை சிரப்பிணி மூர்ச்சைநோய்
பூரிக் குஞ்சல தோடமும்பீலிகம்
வரும லப்பெருக் கோடும கோதரம்
வாத மாதிமுத் தோடஞ் சுரங்குளிர்
பெரும லைப்புரி மேகம் பிடகமும்
பேருக் திப்பிலிப் பேரங் குரைக்கவே”

எனவும்;

“ஆசனநோய் தொண்டைநோ யாவரண பித்தமுதல்
நாசிவிழி காதிவைநோய் நாட்புழுநோய்—வீசிடுவி

யங்கலாஞ்ச னஞ்சிதையும் அம்பா யழிவிந்தும்
பொங்கலாஞ்ச நங்கையர்கோட் போல்"

எனவும் வருவனவற்று ளுணர்க.

'முறைமை' என்றதற்குத் தென்னாட்டு முறை என்று எழு தினமை :

"தெவ்வடர் பற்பமுந் தெரிந்தசெந் தூரமும்
தெள்ளுமாத் திரையுடன் தென்மைசெய் கிருதமும்
தெரிவுறு லேகியமும் தென்னிடு தயிலமும்
தென்முனி முறையினிற் றென்மொழி வாகடத்
தெம்பினிற் கைவரத் தெய்வரட் சணையிதே"

என்று இந்நூலிலேயே புகன்றிருத்தலி னென்றறிக.

(தொடரும்)

'உயர் நிலையடைவ தெங்ஙனம்?'

(திரு. M. P. S. வேலாயுதம் பிள்ளையவர்கள்)

அவாவுடைய மனிதன் பிறரைத் தூய்மைப்படுத்துவதிலேயே அடிக்கடி முனைந்து நிற்கின்றான், ஆனால் அறிஞனுள்ள மனிதனோ தன்னையே தூய்மைப்படுத்திக்கொள்ளுகிறான். ஒருவன் உலகத்தைச் சீர்திருத்த உளங்கொள்வானாயின், அவன் தன்னையே முதலில் சீர்திருத்தத் தொடங்கட்டும். தன்னைச் சீர்திருத்துவதென்பது விருப்பத்திற்குரியவற்றை யொழிப்பதுடன் முடிவடையவில்லை. முடிவுக்கு அது தொடக்கம், ஒவ்வொரு வீண் எண்ணமும், தன்னல நோக்கமும் அறவே யொழியும்போதுதான் அது முடிவடைகிறது. மாசற்ற தூய்மையும், அறிவும் அடையப் பெறும்வரை, ஒழிக்கப்படவேண்டிய ஒருவகைத்தான தன்னடிமைத்தனமோ அல்லது தவறோ இருந்தேவருகிறது.

---

* ஜேம்ஸ் ஆலன் என்ற ஆங்கில நாட்டுப் பெரியார் இயற்றியுள்ள அறிவுரைகளின் மொழிபெயர்ப்பு.

உயரிய நோக்கமாகிய இயற்கைகளின் உதவியால், மனிதன், இம்மையினின்றும் மறுமைக்கும், அறியாமையினின்றும் அறிவுச்சுடரை நாடியும், கீழே சூழ்ந்துள்ள இருட்டினின்றும், மேலே நிலவும் ஒளியை யடையவும் செல்கின்றான். அஃதில்லா தொழியின், அவன் உலகப்பற்றும், சிற்றின்பமும், அறியாமையும், அறிவுவொளி யுமற்ற இழிவான விலங்காகவே யிருக்கிறான்.

முதலில் உற்றுநோக்கவேண்டியவை முதலில் உற்றுநோக்கப் படவேண்டும்; விளையாட்டுக்குமுன் வேலை; களியாட்டுக்குமுன் கடமை; தன்னலத்துக்குமுன் பிறர்நலம்; நேர்வழியினின்றும் பிறழச் செய்யாத செவ்விய ஒழுங்குமுறை இதுவாகும். சரிவரத்தொடங்குதல் வெற்றிவழியில் அரைவாசி சென்றதாகும். தொடங்குங்காலே தவறிழைக்கும் உடற்பயிற்சி வல்லுநன், அவனடையக்கூடிய வெகுமதியையு மிழக்க நேரிடும்; உண்மையுடன் தன்தொழிலைத் தொடங்காத வணிகன், நாணயமிழந்துபோவான்; உயர்நிலையையடையப் பாடுபடு மொருவன் தவறுவானேல், நேர்மையாகிற மணிமுடியையே இழந்துவிடுவான்; துவக்கத்திலேயே தூய எண்ணங்கள், மேதக்க நேர்மை, தன்னலமொழிந்த கருத்து, உயரிய நோக்கங்கள், ஒருகாலும் மாசடையாத உளச்சான்று ஒழுங்குபெறத்தொடங்குவதுசாலதே. வாழ்க்கையை எளிதாகவும், அழகுபெறவும், வெற்றியுடனும், அமைதியாகவும் நடைபெறச்செய்ய ஏனைய ஏதுக்களும் மாறுபாடின்றி நிகழ, முதலில் உற்று நோக்கப்படவேண்டியவை முதலில் உற்று நோக்கப்படவேண்டுமென்றது இஃதே.

விலங்கு நிலை மனிதனுக்கு இனிமை யூட்டுமளவும், அவன் உயர்நிலையடைய முடியாது; அதுவரை அமைதிகொண்டிருக்கலாம்; ஆனால் அவ்வினிமை வெறுப்பாக மாறுங்கால், அவன் வருத்தமேவிட்டு, உயர்நிலையையடைய எண்ணுகிறான். அவனுக்கு உலகவின்பம் மறுக்கப்படும்போழ்து, தூய்மையான அறிவின் இன்பத்தை நுகர அவாவுகின்றான். துப்புரவில்லாமை துன்பமாக மாறும்போதுதான்; துப்புரவாயிருக்க நாடுவது; தவறிழைத்த பின்னர் வருந்துவதிலிருந்தே, உயர்நிலையடைய உன்னுவது. ஆனால் வன்மை பொருந்திய அகவிறக்கைகளி னுதவியால் மனிதன் உயரியமேனிலையை யடைய முடியும்.

உயர்நிலையையடைய விரும்புவோன் அமைதியான வாழ்வுக்குரிய வழியில் நடக்கத்தொடங்கிவிட்டான்; அவன் நின்றுவிடாமலும், பின்வாங்காமலுமிருப்பானாகில், வெற்றி பெறுவது திண்ணம். அவன் அவ்வப்போது தூய்மையாயுள்ள நிலையை உள்ளத்தில் உருச்செய்து கொண்டுவந்தால், உயர்நிலையை அவன் அடைந்துவிடுவான்.

விரும்பும் வண்ணமே

மனிதன் தான் விரும்பும் வண்ணமேயாகின்றான், அவன் எதனையடைய விரும்புகிறானோ, அஃது அவன் அடையக்கூடியதற்கோர் அறிகுறியாகும், ஒன்றனை அடைய உளங்கொள்வது அதனை அடையவிருப்பதை முன்பாகவே உறுதி செய்வதாகும். இழிவானவற்றை மனிதன் எவ்வாறு உணரவும், அறியவும் இயலுமோ, அவ்வாறே அவன் உயர்வானவற்றை உணரவும், அறிந்து கோடலும் இயலும். அவன் மனிதன் ஆனமைபோன்று, கடவுளாதலும் கூடும். உளத்தை உயர்நிலைக்கும், கடவுட்டன்மைக்கும் திருப்புதலே முதன்மையான கட்டாயமுள்ள வேலையாகும்;

நினைப்பவனின் தூய்மையற்ற எண்ணங்களல்லாது, தூய்மையற்ற தன்மை பிறிதேது; தூய்மையரின் எண்ணங்களல்லாது, தூய்மை பிறிதுண்டோ? ஒருவன் உளங்கொண்டிருப்பதைப் பிறனொருவன் செய்வதில்லை. ஒவ்வொரு மனிதனும் தூய்மையுடையனாகவோ அன்றித் தூய்மையற்றோனாகவோ, தானேயாகிறான், உயர்நிலையடைய விரும்புவோன் உயர்நிலையடைவதற்கான வழியைத் தன் முன் பார்க்கிறான், இறுதியாய் அவன் அடையவிருக்கும் அமைதி நிலையை அவன் நெஞ்சம் முன்னதாகவே உணர்கிறது.

மேலுலகத்தின் கதவுகள் எப்போதும் திறந்தேயுள்ளன. எவனும் தனதல்லாத, பிறன்விருப்பத்தாலோ, வலிமையாலோ ஆங்குப் புகுவது தடுக்கப்படவில்லை. ஆனால் உலகமயக்கிலுழன்று, அப்பற்றினையே விரும்பியிருக்குந்துணையும், தீவினைக்கும், துன்பத்துக்கும் ஆளாயிருக்குமளவும் எவனும் மேலுலகத்தை அடையமுடியாது.

தீவினையுந் துன்பமும் கூடிய வாழ்வையன்றிப் பெரிய, உயரிய மேன்மையான கடவுட்டன்மையானதோர் வாழ்விருக்கின்றது. அஃது எளிதானது. எல்லோரும் அதனையே அடைய ஆழ்ந்திருக்கிறார்கள், தீவினையை அறவேயொழித்தவாழ்க்கை, கேட்டினைப்போக்கி வெற்றிமாலை சூடிய வாழ்க்கை; அறிவும் மகிழ்ச்சியும் நன்மையும் பொறுமையும் ஒழுக்கமும் அமைதியும், சாலவே அமையப்பெற்ற வாழ்க்கை அஃதே, இவ்வாழ்வினைத்தேடி இன்றேயடையவுங்கூடும். இத்துறைபற்றிவாழ்வோன், எத்தகைய மாறுதலிடையேயும் உறுதியுடனும், கவலையுற்றிருப்பவர்களிடையே பொறுமையாகவும், சச்சரவுகளாற் சூழப்பட்டிருப்பினும் அமைதியுடனும் வதிகின்றான்.

தேவாரக் கோய்மலர்

[திரு. M. S. பூரணலிங்கம் பிள்ளையவர்கள் B.A., L.T.]

திருஞானசம்பந்தர்-திருமுறை க.

க என்னுள்ளங் கவர் கள்வன் (பிரமபுரம்)

உ கற்றல் கேட்ட லுடையார் பெரியார் ,,

ங குறிகலந்த விசைபாடல் (புகலூர்)

ச வாசிதீர வடியார்க் கருள்செய்து வளர்ந்தான் (வலிதாயம்)

ரு முடிகையி னற்றொடு மோட்டுழவர்
முன்கைத் தருக்கைக் கரும்பின்கட்டிக்
கடிகையி னுலெறி காட்டுப்பள்ளி
காதல்செய் தான்கரி தாயகண்டன் (காட்டுப்பள்ளி)

சு செந்தமிழோர்கள் பரவியேத்துஞ் சீர்கொள் (செங்காட்டங்குடி)

எ கதியருளென்று கையாரக்கூப்பி (ஆவூர்ப்பசுபதீச்சரம்)

அ கலையாரொடு சுருதித்தொகை கற்றோர்மிகு கூட்டம் (வேணுபுரம்)

௯ பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையு
முண்ணின்ற தோர்சுவையும் முதுதாளத் தொலிபலவும்
(வீழிமிழலை)

௰ கருகுகுழன் மடவார்கடி குறிஞ்சிபது பாடு
முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடைவோமே
(முதுகுன்றம்)

௧௧ பறையும் பழிபாவம் படுதுயரம் பலதீரும் (நெய்த்தானம்)

௧௨ கலைநிலவிய புலவர்களிடர்
களைதருகொடை பயில்பவர் (வீழிமிழலை)

௧௩ இலையார் மலர்கொண் டெல்லி நண்பகல்
நிலையா வணங்க நில்லா வினைகளே (செம்பொன்பள்ளி)

௧௪ பசைவி ளங்கப் படித்தா ரவர்போலும்
வசைவி ளங்கும் வடிசேர் நுதலாரே (புத்தூர்)

௧௫ பொடிகள் பூசிப் புறங்கா டரங்காகப்
படிகொள் பாணி பாடல் பயின்றாடும் (சோற்றுத்துறை)

௧௬ பூசம் புகுந்தா டிப்பொலிந் தழகாய
ஈச னுறைகின் றவிடை மருதீதோ (இடைமருதூர்)

௧௭ தேக்குந் திமிலும் பலவுஞ் சுமந்துந்திப்
போக்கிப் புறம்பூ சலடிப் பவருமால்
ஆர்க்குந் திரைக்கா விரி ,,

௧௮ ஊனத் திருணீங் கிடவேண்டில்
ஞானப் பொருள்கொண் டடிபேணும்
தேனைத் தினியா னமருஞ்சேர்
வானம் மயிலா டுதுறையே. (மயிலாடுதுறை)

௧௯ பொய்த்தவம் பேசுவதல்லாற்
புறனுரையாதொன் றுங் கொள்ளேன் (வேட்களம்)

௨௰ சங்கம தார்குற மாதர் தங்கையின் மைந்தர்கள் தாவிக்
கங்குலின் மாமதி பற்றுங் கற்குடி மாமலை யாரே. (கற்குடி)

௨௧ தேனிடை யார்தரு சந்தின் றிண்சிறை யாற்றினை வித்திக்
கானிடை வேடர் விளைக்குங் கற்குடி மாமலை யாரே ,,

உஉ மங்கையை வாட மயல்செய்வதோ இவர்மாண்பே.
(பாச்சிலாச்சிராமம்)

உ௩. கேடும்பிறவியு மாக்கினருங் கேடிலா
வீடுமாநெறி விளம்பினரெம் விகிர்தனர். (ஆலங்காடு)

உச நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை (சேய்ஞலூர்)

உ௫ பீரடைந்த பாலதாட்டப் பேணாத வன்றாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்தடிந்தான். „

உ௬ பெண்டிர்மக்கள் சுற்றமென்னும் பேதைப்பெருங் கடலை
விண்டுபண்டே வாழமாட்டேன் (வலிவலம்)

உஎ துஞ்சும்போதுந் துற்றும்போதுஞ் சொல்லுவனுன் திறமே.
„

உஅ கற்றகேள்வி ஞானமான காரணமென்னைகொலாம் (சோபுரம்)

உ௯. விருத்தனாகிப் பாலனாகி வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகி (நெடுங்களம்)

௩௰ சழிந்தசென்னிச் சைவவேடந் தானினைத்தைம் புலனும்
அழிந்தசிந்தை யந்தணாளர்க் கறம்பொருளின் பம்வீடு
மொழிந்தவாயான் முக்கணாதி மேயதுமு துகுன்றே.
(முதுகுன்று)

௩க வெவ்வ மேனிய ராய்வெள்ளை நீற்றினர்
எவ்வஞ் செய்தெ னெழில்கொண்டார் (பாற்றுறை)

௩உ. பன்னீர்மை குன்றிச் செவிகேட்பியிலா
படர்நோக் கிற்கண் பவளந்நிற
நன்னீர்மை குன்றித் திரைதோலொடு
நரைதோன் றுங்கால நமக்காதன்முன்
(தூங்கானைமாடம்)

௩௩ புல்வீழ்ந்து நாத்தளர்ந் துமெய்யில்வாடிப்
பழிப்பாய வாழ்க்கை யொழிய „

௩ச அமரர்கோனை மென்னிடைக்கே வரவொருகாற் கூவாயே
(தொடரும்) (தோணிபுரம்)

சைவப்பெரியார் பிரிவாற்றுமை

நேற்று மார்கழித் திங்களில், திருவாளர் கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் B. A. என்னும் அருமைப் பெரியாரை நம் சைவத் தமிழ்நாடு இழந்துவிட்டமைக்கு யாம் பெரிதும் இரங்குகின்றேம்.

செட்டியாரவர்கள் தமது இளமை தொட்டே திருமுறைப் பயிற்சியிற் பயின்று பழகி அதன்கண் சிறந்த ஆராய்ச்சித் திறன் பெற்றிருந்தனர். சைவ சித்தாந்தக் கல்வியுந் தமிழ்ப் புலமையும் வடமொழிப் பயிற்சியும் உடன்வாய்ந்து விளங்கினர். ஆங்கிலப் புலமையிலுஞ் சிறந்து பட்டம் பெற்றனரேனும், அதன் நாகரீக முறைகளில் நெஞ்சங் கதுவப் படாமற் றிகழ்ந்தனர். இனைய அரிய நன்மைகள் வாய்க்கப் பெற்ற பெரியார் இளமையில் தாம் அரசாங்க அலுவலில் அமர்ந்திருந்தும் அதனையும் அதனால் வரும் பொருளையும் பொருட் படுத்தாமல் விடுத்துத் தமது திருமுறையாராய்ச்சிகள் முதலான சமயக் கல்வியைச் சைவநாட்டுக்குத் தருதலெண்ணிச் சமயத் தொண்டில் இறங்கிச் சென்னையிலும் வேறு வெளி நகரங்களிலும் அளவிலாத விரிவுரைகள் செய்து வந்த பெருமை அவர்க்குரியது. அகத்தியர் தேவாரம், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், திருக்கைலாய ஞான வுலா முதலியவற்றிற்கு உரை யெழுதினர். வடமொழியிலிருந்து ‘சிவரகசியம்’ மொழிபெயர்த்தனர். பன்னிருதிருமுறைத் திரட்டொன்றும் திரட்டி வெளிப்படுத்தினர். இறுதியாக நம் கழக வாயிலாக மூவர் தேவாரமும் ஆராய்ந்து பதிப்பித்தனர். இம்மூவர் தேவாரத்துக்கும் ஓர் அரும்பெறல் ஆராய்ச்சியை அவர்பால் எதிர்பார்த்திருந்தோம்; ஆனால் இழந்தோம். இவ்வரிய பெரியார்க்குச் சைவநாடு தக்க உதவி யளிக்காமற் போனது பெரிதும் வருந்தத் தக்கது. இனி யென் செய்வது? இப்பெரியாருயிர் திருவருளிற் படிவதாகுக!

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.